# தமிழ்நாடு மாதிரி பள்ளிகள், சென்னை – 600 006

அனுப்புநர்

உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு மாதிரி பள்ளிகள்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரி சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை– 600 006.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அரியலூர், செங்கல்பட்டு,
கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி,
திண்டுக்கல், ஈரோடு,
கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம்,
கன்னியாக்குமரி, கரூர்,
கிருஷ்ணகிரி, மதுரை,
மயிலாடுதுறை, நாகப்பட்டினம்,
நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர்,
புதுக்கோட்டை, இராமநாதபுரம்,
இராணிப்பேட்டை, சேலம்,
சிவகங்கை, தென்காசி, தஞ்சாவூர்,
தேனி, திருச்சிராப்பள்ளி,
திருநெல்வேலி, திருப்பத்தூர்,
திருப்பூர், திருவள்ளூர்,
திருவண்ணாமலை, திருவாரூர்,
தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம்,
விருதுநகர்.

ந.க. எண். 326/C1/MS/2023 நாள்.12.06.2023

பொருள் : மாதிரி பள்ளிகள் (Model Schools) – மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அரசு மாதிரிப் பள்ளியில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்துதல் – மாவட்ட ஆட்சியருடனான அறிமுகக்கூட்டமும் நடத்த அறிவுறுத்துதல் – சார்பு.

பார்வை :
1. G.O. (Ms.) No.164, School Education (SSA1) Department, dated 29.11.2021.
2. G.O. (Ms.) No.138, School Education (SSA1) Department, dated 08.08.2022.
3. Proposal letter **RC No. 103/A1/MS/2023** dated 17-03-2023, for establishing 13 additional schools.

... ... ...

பார்வை 1-யின்படி "அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு ஏதுவாக, சிறப்பு திட்டமாக மாதிரிப் பள்ளிகள் உருவாக்கப்படும்" என அறிவிக்கப்பட்டு அதனை செயல்படுத்தும்

விதமாக அரியலூர், கடலூர், தருமபுரி, fள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் 9,10,11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் உண்டு, உறைவிட வசதியுடன் கூடிய 10 மாதிரிப் பள்ளிகள் 2021-2022-ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

2. பார்வை 2 –யின்படி 2022 - 2023 -ஆம் கல்வியாண்டில் 9 வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை சென்னை, மதுரை, திருப்பத்தூர், நீலகிரி, திருவாரூர், சிவகங்கை, ஈரோடு, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருவள்ளூர், வேலூார், நாகப்பட்டினம், இராணிப்பேட்டை, தஞ்சாவூர் ஆகிய 15 மாவட்டங்களில் 17 மாதிரி பள்ளிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

3. பார்வை 3-யின் படி 2023-24-ஆம் கல்வியாண்டில் 9 வகுப்பு முதல் 12 வகுப்பு வரை செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருப்பூர், நாமக்கல், கரூர், திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, கன்னியாக்குமரி ஆகிய 13 மாவட்டங்களில் மாதிரி பள்ளிகள் தொடங்கப்பட்டு உள்ளன.

3. இணைப்பில் கண்டுள்ள மாணவர்கள் தங்களது மாவட்டங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து 11-ஆம் வகுப்பில் உயிரியியல் மற்றும் கணினிப் பிரிவில் மாதிரிப் பள்ளியில் சேர தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட மாதிரிப் பள்ளியில் 21.06.2023–க்குள் சேர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாதிரி பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு :
மாணவர்களின் விவரப் பட்டியல்



உறுப்பினர் செயலர்

நகல்
மாதிரி பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்
மாதிரி பள்ளிகளின் மாநில மற்றும் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள்